உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி—௫௧.] ஜய-௵—கார்த்திகை-௴ [பகுதி—௧.

Vol. 51. November-December—1954. No. 1.

செந்தமிழ் வாழ்த்து

நம் செந்தமிழணங்கு ஐம்பதாண்டு நிறைவெய்தி ஐம்பத்தொரு பிராயம் புகுவதை முன்னிட்டு, இலங்கை-தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பண்டிதமணி திரு. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள் மனமுவந்து போற்றிய மங்கலவாழ்த்துப் பாடல்கள்:—

வாழ்கவே மாயோன் வடவேங் கடக்குமரி
வாழ்கவே மாமதுரை வையைநதி—வாழ்கவே
வாழ்கவே நீடூழி மன்னுந் தமிழ்ச்சங்கம்
வாழ்கவே செந்தமிழும் வாய்ந்து. (1)

பாட்டான் உரைமணியான் பாவலரும் நாவலரும்
வேட்டா தரித்தணிய வீறுகொடு—நாட்டார்கள்
வந்துவந்து வாழ்த்துரைப்ப வாழ்கநீ நீடூழி
செந்தமிழே! செல்வஞ் சிறந்து. (2)

தோண்டச் சுரக்குந் துறைத்தீந் தமிழ்வளர்க்கும்
பாண்டித் துரைபூ பதிவாழ்க—ஈண்டிய
சந்தங் கமழும் தமிழ்ப்பொதியப் புத்தேளும்
செந்தமிழும் வாழியரோ சேர்ந்து. (3)

சேரர் மரபு

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

சேரர் தமிழ்நாட்டு மூவேந்தருள் ஒரு மரபினர். சேர சோழ பாண்டியர் என வேந்தரைக்கூறும்பொழுது முதலில்வைத்துக் கூறுவதனாலேயே அவர்களது தொன்மை உணரப்படும். சங்க காலத்துச் சேரமன்னர்களைப் பற்றி இலக்கியங்கொண்டு நாம் ஓரளவுதான் உணரமுடிகிறது. மரபைப்பற்றி ஒன்றும் உணர இயலவில்லை. சேர நாட்டில் செருமான் என்ற ஒரு சிறு கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்கள் சேரமான் பரம்பரையினர் ஆதல் வேண்டும் என்கின்றனர் சிலர். இவர்கள் நாயரினத்தில் ஓர் பிரிவினராவர்; புலையர் என்ற ஒரு பிரிவினர் ஆங்கு உண்டு. அவர்கள் துரியோதனனுக்குப் போரில் துணை செய்ததனால் இழிநிலை யடைந்ததாகக் கூறுகின்றனர். நாயர் நாகமரபினர் எனக் கருதப்படுகின்றனர். ஆதலின் சேரரது மரபினை ஆய்வாம்.

சிங்களம் சாவகம் முதலியன நாக நாடுகள் எனக் குறிக்கப்படுகின்றன. புத்தர் தமதுமதத்தினைப் பரப்பச் சிங்களத்துக்கு வந்தபோது ஆங்கிருந்த இயக்கர்கள் (Yakshas) அவரை எதிர்த்தனர். ஆதலின் இயக்கர்கள் வாழ்தற்கியலாதபடி மழையின்மையைப் புத்தர் உண்டாக்கினர். பின்னர் அவர்களைக் கிரித்வீபத்திற்கு (மலையாளத்திற்கு)ச் செல்லும்படி புத்தர் கட்டளையிட்டார். அவ்வாறே அவர்கள் சிங்களத்தை விட்டகன்றனர். நாகர்கள் புத்தரோடு உறவு கொண்டனர். புத்தரோடு வந்த இந்திரன் அவர்களிடம் இராஜாயதன விருட்சத்தைத் தந்து சென்றான். நாகர்கள் அம் மரத்தினை

போற்றி வளர்த்தனர்; புத்தசமயத்தைப் பின்பற்றினர்; இந்திர வணக்கத்தைக் கைக்கொண்டனர். அந் நாளிலிருந்து இலங்கை வரலாற்றில் நாகரும் மறைந்தனர். சிங்களத்தில், மகதர்கள் கங்கைச் சமவெளியிலிருந்து குடியேறுவதற்கு முன்பே இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் நாகர்கள் எனச் சிங்கள வரலாற்றாசிரியர் பார்க்கர் (Parker) பகர்கின்றார். நாகர்கள் முதன்முதலில் வாழ்ந்த இடம் இந்தியாவின் தென்கோடியே என்பர்[1].

மலையாளப் பகுதி, மாலவல்லி, வனவாசியைச் சூழ்ந்த பகுதி நாககண்டம் என வழங்கப்பட்டதுண்டு. மலையாள வாசிகளில் ஒவ்வொரு குடும்பத்தினரும் நாகத்தை வணங்கி வருவதும் இதனை வலியுறுத்தும் என்பர். கேரளம் பரசுராமரால் அமைக்கப் பட்டது எனக் கூறுகிறது அந் நாட்டு வரலாறு. பரசுராமர் கேரளத்தில் நம்பூதிரிப் பிராமணர்களைக் குடியேற்றியபோது நாகர்கள் அவர்களை எதிர்த்தனர். நாகர்களை அவர்களால் வெல்ல முடியவில்லை. பரசுராமர் அந் நாகர்களுக்கு நாட்டிலோர் பகுதியைத் தந்து சமாதானம் செய்து கொண்டார். நம்பூதிரிகள் நாகமகளிர்களை மணந்துகொண்டனர். ஆதலின் அமைதியாக வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பிராமணர்களே நாட்டை ஆண்டுவந்த காலத்து ஆட்சியில் தகராறேற்படவே ஆட்சிமுறையினை மாற்றியமைத்தனர். அரசியலவையின் முதல்வர் நாகமரபினராயிருத்தல் வேண்டும். அவர் பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஏனையவர் பிராமணர்கள் மூன்று வருடங்களுக் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படவேண்டும்; முதல்வன் பன்னிரண்டுவருடங்களுக்கொரு முறை தேர்ந்தெடுக்கப் படுதலின் நாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. நாட்டு அரசியல் அவையைச்சேர்ந்த நாடுவாழிகள் (Raksha purushas) ஐவரும் ஒரு கட்சியாக நாட்டுமக்கள் ஒருகட்சியினராக இரு சாராருக்கும் பூசல் எழுந்தது. அப்பொழுது கொங்குநாட்டு மன்னன் ஒருவன் இரு சாராருக்கும் உதவிசெய்து வந்தான். ஆயினும்

[1] History of Ancient Ceylon by Parker.

ஒருவருக்குதவி செய்வது பிறருக்குத் தெரியாதவாறு ஒழுகி வந்தான். இருகட்சியினரும் அயர்ந்து நின்றனர். சமாதானமாக வாழ எண்ணினர். தங்களுக்கு ஓர் அரசனைப் பிறநாட்டிலிருந்து கொண்டுவரத் துணிந்தனர். முன்னர் தங்களுக்கு உதவிசெய்த மன்னனையே நாடினர். அவனும் இணங்கினன். அவன் பாணவர்மன் உதியன் சேரலாதன் எனப்படுவான். அவன் கேரளநாட்டுமன்னனாக ஆனான். அவன் சேரநாடு ஆண்ட மகாபலியினது மரபில் வந்தவன். ஆதலின் பாணவர்மன் (வானவரம்பன்) எனப்பட்டான். பிராமணர்களது ஆட்சியில் அம்மரபு அரசிழந்திருந்தது, மீண்டும் வீறுகொண்டெழுந்தது. இச் சேரலாதன் புறநானூற்றில் குறிக்கப்படும் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்பர். புறநானூற்று இரண்டாம் செய்யுளில் குறிக்கப்படும் ஐவரையும் நூற்றுவரையும் மேற்குறித்த நாடுவாழிகளாகவும் குடிமக்களாகவும் கொள்ளின் மேற்குறித்த வரலாறு புலப்படும். அச் செய்யுள் பாரதப் போரினைக் குறிப்பதாகக் கொண்டு இடர்ப்பட வேண்டியதில்லை. உதியன் சேரமன்னனாக ஆனது கலி 2988-ம் ஆண்டு என்பர். இவன் காலத்து வஞ்சிமாகர் மகோதயபுரம் என மன்னன் பெயரால் வழங்கியது இவ் வரலாறு கேரள சரித்திரம் கூறுகிறது[1]. இதனாலும் நாகர்கள் மலையாளத்துப் பண்டைய குடிகள் என்பது புலப்படும்.

மைசூர் குடகுப் பகுதியில் கிடைக்கும் சாஸனங்கள் 'அந்நாட்டுப் பண்டைய குடிகள் நாகர்கள், பாம்பினை வணங்குபவர்கள், பெண்வழிச்சொத்துரிமையுடையவர்' எனக்குறிக்கின்றன. தென்னாட்டில் சமுத்திரகுப்தன் படையெடுத்துவந்தபோது அவனை எதிர்த்தவர்களுள் கணபதிநாகன் ஒருவன். சிவஸ்கந்தநாகசதகர்ணியின் மகளை மணந்து ஓர் பல்லவன் காஞ்சியை அடைந்தான். சாதவாகனரது நாட்டினை அவர்களது வீழ்ச்சிக்குப்பின் சூட்டுநாகர் அடைந்தனர். கதம்பர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள் தங்களை

[1] Kerala charitram by Krishnan Pisharoti.

நாகர்மரபினர் எனக் கூறிக்கொள்ளுகின்றனர். துளுநாட்டு ஆளுபர் (ஆள்வார்)களும் நாகமரபினர் எனக் கூறப்படுகின்றனர். ஆதலின் மலையாளப்பகுதி நாகர்கள் வாழ்ந்த இடம் என்பதிற் சிறிதும் ஐய மில்லை.

நாகர் நாகஇலச்சினையையுடையவர். தக்ஷகர் எனவும் கூறப் படுவர். உடையில்லாமல் சஞ்சரிப்பவராதலின் நாகர் எனப்பட்ட னர். (Nangta-Bengali, Nanga-Hindustan=Naked) 'நோக்' (Nog) என்னும் சொல் திரிந்து நாகர் என வழங்குகிறது. 'நோக்' என்றால் நாகர்மொழியில் மக்கள் எனப் பொருள்படும். மக்களாகக் கருதப்பட்டவர், மக்களது வளர்ச்சிக்குக் காரணமானவர் எனப் பொருள்கொள்ளப்படும். இது அவர்களது மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையிலிருந்து புலப்படும். நாகரீகம் என்னும் சொல்லும் இவர்களது வாழ்க்கையிலிருந்து தோன்றியது எனக் கருத இட னுண்டு. கச்சாரிமொழியில் நாகர் என்னும் சொல்லுக்கு வீரர் என்பது பொருளாம். இடையின் மேல்பகுதி மனிதவடிவாகவும் கீழ்பகுதி பாம்பின்வடிவாகவும் உள்ளவர் நாகர் எனக்கூறுவர். எக் காரணம்பற்றி இங்ஙனம் கூறினர் என்பது விளங்கவில்லை. சிங்களச் சிற்பங்களும் இந்தியாவில் அமராவதிச்சிற்பமும் நாகர்களை அவ்வடி வில் காட்டவில்லை. நாகத்தின் தலைபோன்ற முடியிணையணிந்த மனிதர்களாகத்தான் அச்சிற்பங்கள் குறிக்கின்றன. நாகர்கள் இன்பம் நிறைந்த வாழ்க்கையினர் என்பதை நம்நாட்டுப் புராணங்க ளும் கூறுகின்றன. நாகர்கள் இந்தியாவில் பெரும்பான்மையான பகுதிகளில் வாழ்ந்தவர். மன்னர்களாக நாடாண்டவர். நாகர்கள் அசுரர்கள்; நாகர்கள் வீழ்ச்சியடைந்தபின் அசுரரும் வீழ்ச்சியுற்ற னர் என்பர்[1]. சுமேரு பகுதியிலிருந்து இந்திரனால் துரத்தப்பட்டு சால்மலித்வீபத்தை (Chaldia) அடைந்தனர் என்பர்.[2] இவர்கள் தார்த்தாரியர், தார்த்தாரியமலைப் பகுதியில் வாழ்ந்தவர்[3]. தார்த்த

1 & 3 Pre Buddhist India by Mehta. (2) Kutavaka Jataka.

ராஷ்டிரன் (Dhataratta-தார்த்தாரியத்தலைவன்) என்னும் சொல்லைத்திருதராஷ்டிரன் என்னும் சொல்லொடு ஒப்புநோக்குதல்தக்கது. தார்த்தாரியர் திராவிடர்களே என்பது வரலாற்றாராய்ச்சி முடிபாம்.

நாகர்களுள் ஆய் நாகர் (Ao Nagas) ஒரு பிரிவினர், திருந்திய வாழ்க்கையுடையவர்; அஸ்ஸாம், பர்மா பகுதியில் வாழ்ந்தவர், வாழ்பவர். ஆய் என்ற சொல் தாய் எனப் பொருள்படும். இவர்கள் தாயை இச் சொல்லால் அழைத்தமையின் இப் பெயர் பெற்றனர் என்பர்,[1] [Refer Assam-Syam (Siam)-Ahom-Tai] நந் தமிழ் நாட்டில் ஆய் மரபினர் இம் மரபினரே யாவர். ஆய் அண்டிரன் இலிங்க வழிபாட்டொடும் நாகத்தொடும் தொடர்பு கொண்டிருப்பது நோக்கத்தக்கது. Oyo என்ற சொல்லும் தாய் எனப் பொருள் படும் என்பர். நல்லியக்கோடன் இம் மரபினனுவன். ஓய் மரபு நாகர் மரபு என நச்சினார்க்கினியர் சிறுபாணாற்றுப்படையில் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. இலங்கை வரலாற்றாசிரியராகிய திரு. இராஜநாயகம் அவர்கள் நாகர் விஸ்வகர்மர் என்பர்.

நாகர்களும் கச்சாரிகளும் ஓரினத்தவர் என்பர் வரலாற்றாசிரியர்கள்.[2] அஸ்ஸாமில் காமரூபம் என்னுமிடத்தில் அமைந்துள்ள காமாட்சி ஆலயம் இவர்கள் தேவி வணக்கமுடையவர்; சாக்தர்கள்; என்பதை உணர்த்துகிறது. காமாட்சி-காமாக்யா-காளியின் அம்சம் தாமசாரி மாயை என்பர். மலையாளத்துப் பகவதி வழிபாடு ஆங்கு நாகர்கள் வாழ்ந்தனர் என்பதை நன்கு புலப்படுத்துகிறது.

கச்சாரிகள் சீனு, திபேத் பகுதிகளில் வாழ்ந்தவர்; பிரமபுத்ரா நதிப் பள்ளத்தாக்கில் வாழ்பவர். கச்சாரி, கச்சின், கச்சி, கோச் மரபுகள் ஒரு மரபின் பிரிவுகளேயாம். சின் மரபினர் வாழ்ந்த இடம்

---

[1] Ao Nagas of Assam by W. E Smith.

[2] History of Upper Assam by L. W. Shakespear.

சிறு.[1] கோச் மரபினர் வாழ்ந்த இடம் கோச், கோச் பீஹார் என வழங்கப்படும். கொச்சின் என்னும் நகரமும் அவர்கள் பெயராலேயே வழங்கப்பட்டதாக வேண்டும். கச்சி நகரம் கச்சி மரபினர் வாழ்ந்த இடமாக வேண்டும். இவர்கள் தமிழ்நாட்டுக் குடிகள் என ஹாட்ஜ்சன் (Hodgson) என்னும் வரலாற்றாசிரியர் கூறுகின்றார். கச்சார் நாட்டுப் பகுதியில் அழிந்து கிடக்கும் கட்டிடங்கள் கச்சாரிகளது கட்டடக்கலை வன்மையை உணர்த்துகின்றன. கச்சாரிகள் திமாசா (Dimasa) எனவும் வழங்கப்படுவர். (Dimasa) திமாசா என்றால் பேராறுகளின் மக்கள் என்று பொருள்படும்.[2] எனவே ஆறுகள் உள்ள இடங்களில் பயிர்த்தொழில்கள் செய்துவந்தனர் என்பது புலனும். இவர்கள் மலைப்பகுதியில் நீர்வளமுள்ள இடங்களில் அமைதியாக வாழ்ந்தவராவர். சேரமக்கள் என்பதற்குத் திரு. கோபால் பணிக்கர் பயிர்த்தொழில் செய்பவர் (chera-dam, makkal-people-agriculturist) எனப் பொருள் கூறியிருப்பதும் இதனுடன் ஒப்புநோக்கத் தகுந்தது. செரு என்னும் சொல் வயல் எனப் பொருள் படுதலும் கவனிக்கத்தக்கது. கோலேரிய மரபினராகிய முண்டர்களது மொழியில் செரு (cheru) என்னும் சொல் ஊர் எனப் பொருள்படும். அச் சொல்லே கோலேரியருள்-முண்டர் களுள்-வன்மை மிக்க ஓர் மரபினைக் குறிக்கும். கோசல அங்க தேசங்களில் செருகுல மன்னர்கள் ஆண்டனர் என முண்டர் வரலாறு கூறுகிறது.[3] மதகைடபன் ஓர் முண்டன். கங்காநதிக்கரையில் உள்ள அம்பிகோட் (Ambikot) (சேரம்-cherum) எனப்படும் கோட்டை) செரு மன்னருக்குரியது. முண்டா மொழியில் கச்சு (Kachu) எனின் ஆமை எனப் பொருள்படும். கச்சாரிகளது நகரத்துள் ஒன்று கமடாபூர், இறைவன் கமடேஸ்வரர். கமடம் என்

---

[1] Living races of Mankind by Hutchinson.

[2] History of Assam by Edward Gait.

[3] History of Mundas by Saratchandra Ray.

பது ஆமை ஆதலின் சச்சாரிகள் முண்டர்களது இனத்தைச் சார்ந்தவராவர். சிங்போங்கா (Singbonga) என்னும் இறைவன் முதலில் ஆமை, நண்டு, அட்டை ஆகிய மூன்றையும் உண்டாக்கி உயிர்களைப் பெருக்கிப் பிறகு மக்களைப் படைத்தார் என முண்டர்கள் வரலாறு கூறுகிறது. இவர்களது கொள்கையின்படி முண்டர்கள் (கச்சாரிகள்—நாகர்கள்) உலகத்தில் முதன்முதலில் தோன்றிய மக்களாவர்.

கச்சாரிமரபில் இருபது பிரிவுகளுண்டு. அவர்களுள் சுவர்க்கர் (Swargaaroi) என்பார் ஒரு பிரிவினர். சேரர்கள் வானவர் எனப்படுதல் இச் சுவர்க்கரை நினைவூட்டுகிறது. பான்பரா (Banbararoi) என்பவர் ஒரு பிரிவினர். மூங்கில் நிறைந்த பகுதியில் வாழ்பவர் என்பது இச் சொல்லின் பொருள். இச் சொல்லொடு வானவரம்பன் என்னும் சொல் ஒப்புநோக்குதற்குரியது.

கோச் (Koch) மக்கள் அஸ்ஸாம் பகுதியில் பயிர்த்தொழில் செய்து வாழ்ந்தவர். மகம்மது துக்ளக் தனது படைகளை அந் நாட்டில் செலுத்தியபோது அப்படைவீரர்கள் அந்நாட்டு மக்கள் மந்திரக்கலையின் வல்லவராதலின் அந்நாட்டினுள் நுழையமாட்டோம் எனக்கூறியதாக, L. W. ஷேக்ஸ்பியர் என்னும் வரலாற்றாசிரியர் கூறியிருக்கிறார். தாய் (Tai) என்னும் மரபினர் கச்சாரி மரபினைச் சார்ந்தவர். கச்சாரிகள் போடோ (Bodo) எனவும் போடோபிசா (Bodofisa) எனவும் வழங்கப்படுவர். போடோபிசா என்றால் வீமனது மக்கள் எனப் பொருள்படும். வீமனுக்கும் இடிம்பிக்கும் பிறந்தவர்கள் என டோராங் (Darrang) பகுதியிலுள்ள கச்சாரிகள் கூறுகின்றனர். கோங் (Kong-Liasongkong) என்னும் சொல் கொங்குநாட்டை நினைவூட்டுகின்றது. குரங்கர்கள் (Quoirengs) வாழ்ந்த இடம் கொங்கு எனப்பட்டதுபோலும். இராமாயணம் குறிக்கும் வானரர்கள் இவர்களாகத்தான்வேண்டும் என்பதில் ஐயம்

வருதற்கில்லை. கச்சின், கச்சாரி, கோச், நாகர் ஆகியவர்கள் மங்கோலியத்திராவிடர் எனக் கூறுகின்றனர். கோச்மரபினர் ஆரியத்திராவிடர் எனவும் குறிக்கப்படுகின்றனர். கச்சி மக்கள் கச்சாரி எனப்படுதல்போலக் கோச்மக்கள் கோசாரி எனவும் வழங்கப்பட்டனர். கச்சாரிமரபினர் வாய்மையும் வீரமும் உடையவராதலின் கோச்மக்கள் வாய்மொழிக்கோசர் ஆவர்.

கச்சாரி, கச்சின், கச்சி, கோச், நாகர், நாயர் ஆகிய யாவரும் ஓரினத்தவரே என்பது அவர்களது பண்பாட்டொற்றுமையினால் விளங்கும்:[1] (1) தூண்கள் நிறுத்தி அதன்மேல் வீடுகட்டி வாழ்வர். (2) சவங்களை வீட்டின் மேல்பகுதிகளில் அடக்கம் செய்து வைப்பர். (3) ஆண்களும் பெண்களும் தமக்கு விருப்பமான காதலரைத் தாமே தேர்ந்துகொள்வர். இதனால் இருபாலாருக்கும் திருமணத்துக்கு முன்பு ஏற்படும் கூட்டுறவினை யாரும் தடுப்பதில்லை. எனினும் மணத்தின் பின்னர் கற்புவழுவாது இருக்கவேண்டும். விரும்பினால் காதலர் பிரிந்துவிடலாம். அதன்பின்னர் ஆடவர் வேறு மகளிரை, மகளிர் வேறு ஆடவரை மணம் செய்துகொள்ளலாம். (4) மணமாகாத ஆடவர்கள் தங்கி உறங்குவதற்கென ஓர் தனியிடம் உண்டு. மணமாகாத மகளிருக்கும் அவ்வாறு தனியிடம் உண்டு. ஒரே இடத்தில் இருபாலாரும் தங்கியிருப்பதுமுண்டு. இவ்வாறு தனித்திருக்கச் செய்வது மேற்குறித்த செய்திக்குத் துணையாம். (5) மகளிர் பச்சை குத்திக்கொள்வர். (6) ஒவ்வொருவரும் கேடயம் வைத்திருப்பர். (7) ஆடவர் மக்கள் தலையினை வேட்டையாடுவர். அவர்கள் பகைவரை அழிக்குந்திறமையினை இது உணர்த்துகிறது. மகளிர் ஆடவரை அத்துறையில் ஊக்குகின்றனர். இவ்வேட்டையில் திறமையுள்ளவர்களைத்தான் மகளிர் மணப்பர். எவ்வளவுக்கெவ்வளவு

---

1 Ao Nagas of Assam by W. E. Smith.

அதிகமாகத் தலைகளை வேட்டையாடிக்கொண்டு வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு மதிப்புண்டு. சேரர்களுக்கு எழுமுடியாரம் குறித்திருப்பதும் இவ்வுண்மையை உணர்த்தும்.

ஆதலின், முண்டாமரபினரான செரு (cheru) குலத்தவரே-கச்சாரிகளே-நாகர்களே சேரர்கள் என்பது நன்குபுலனும். [1]வானவன், வானவரம்பன் என்பன சேரர் மரபினைக் குறிக்கும் சொற்களே என்பதும் புலனும். நாகர்மரபில் ஒருபிரிவினரான மாறன் (Morans) என்பவர்கள் பாண்டிய மரபினராவர் என எண்ணுவதற்கிடனுண்டு. மலையாளத்து மாரன்மார் பாண்டியர்கள் எனக் கூறப்படுகின்றனர். இது ஆய்வுக்குரியது.

---

[1] சேர (வொ chera) என்னும் மலையாளச் சொல் பாம்பெனப் பொருள்படுவதும் இதனுடன் ஒப்புநோக்குதற்குரியது.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

(1876 – 1954)

திரு. ஆர். வீரபத்திரன் அவர்கள் M.A., தமிழ் விரிவுரையாளர்,
திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகக்கல்லூரி, திருவனந்தபுரம்.

கவிமணியின் மறைவு

கவிமணி காலமானார். தமிழ் மக்கள் உள்ளங்களில் இனிதாக ஒலித்துக் கவியின்பம் ஊட்டி வந்த மணியோசை அடங்கிவிட்டது. தேனினும் இனிய கவிதைகளால் பச்சிளங் குழந்தைகள், கற்றவர்கள், கல்லாதவர்கள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவர் உள்ளங்களையும் கவர்ந்து, அவர்களது பேரன்பிற்கும் பாராட்டிற்கும் உரியவரான கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை நம்மிடையே யிருந்து மறைந்து விட்டார்.

கவிமணி ஒரு நிலையம்

கவிமணி மக்கள் இனத்திற்கு, சிறப்பாகத் தமிழர்களுக்கு, ஓர் இலட்சியமாக அமைந்தவர். அவர் தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திளைத்து அதற்கொரு கண்கண்ட சான்றாக விளங்கினார். தமிழினத்தின் உள்ளம், சொல், செயல் ஆகிய அனைத்திற்கும் ஒரு பிரதிநிதி யென்று அவரைக் கூறுதல் தகும். உச்சி முதல் உள்ளங்கால் வரையும் தமிழுணர்ச்சியே நிரம்பப் பெற்றுத் தொட்ட இடமெல்லாம் தமிழனின் இதயத் துடிப்பு ஒலிக்கும் சுருதி கூட்டிய மாசற்ற வீணையாக அவர் விளங்கினார். உலகில் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு காலத்திலும் தோன்றிய மகான்கள் தம் வாழ்வில் கடைப்பிடித் தொழுகிய சிறந்த பண்புகளெல்லாம் ஒருங்கே திரண்டு அமைந்த இலட்சியத்தின் வடிவாக அவர் காட்சியளித்தார். எனவே அவரை ஒரு தனி மனிதராகக் கருதுவதினும் ஒருநிலையமாக எண்ணுவதே பொருத்தமாகும்.

பிறப்பும் கல்வியும்

கவிமணி திருவிதாங்கூரின் தென்பகுதியாகிய தமிழ் நாட்டிலே, புகழ்பெற்ற சிவ ஸ்தலமாகிய சுசீந்திரத்தை அடுத்துள்ள தேரூரில்

பிறந்தார். அவரது இளமைப் பருவம் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எவையுமின்றி, சாதாரணமாகவே கழிந்தது. ஐந்து வயதிலே அவர் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார். புராதனத் தமிழ்க் குடும்பத்திலே தோன்றி, பிற்காலத்தில் தமிழிலே கவிமணியாக விளங்கிய அம் மேதைக்குத் தமிழ் கற்பதற்கு ஒரு பாடசாலைகூட அத் தமிழ்நாட்டில் அக்காலத்தில் இல்லாதிருந்தது. எனவே, ஏனைய சிறுவர்களைப் போலவே [1]தேவியும் மலையாள மொழியைக் கற்றார்.

கவிதை உதயம்

தேவி கருவிலே திருவுடையவர்; பிறவிக் கவிஞர்; ஒப்புயர்வற்ற மேதை. எனவே, இப் புறத்தடைகளால் அவரது உள்ளத்தில் ஊறி நின்ற தமிழுணர்ச்சி அவிந்துவிடவில்லை. பெற்றோர்கள் வீட்டில் வைத்து அவருக்குத் தமிழ் கற்பித்தனர். அப்போது அவரது தமிழறிவு வளர்பிறைபோல் சிறந்து வளர்ந்தது. மிக இளமையிலேயே தேவியின் நாவில் கவிதை உதயமாயிற்று. கவி பாடும் ஆற்றல் மேன் மேலும் வளர்வதற்குரிய வாய்ப்பும் அவருக்கு இறைவனருளால் அமைந்தது. தேரூரிலிருந்த திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த ஒரு மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் துறவி ஒருவர் இருந்தார். அவர் தேவியின் தமிழறிவைக் கண்டு அவரிடம் அன்பு வைத்தார்; தேவியைத் தம்பால் வரவழைத்து இலக்கிய இலக்கணங்களில் சிறிது பயிற்சி அளித்தார். இதனால் தேவியின் கவிதையுள்ளம் வளம் பெற்றுக் கனிந்து பல சிறந்த கவிதைகளை சிருஷ்டிக்கத் தொடங்கியது. அவர் பள்ளி மாணவராக இருந்தபொழுது பாடியதே 'அழகம்மை ஆசிரியவிருத்தம்'. அந் நூல் பழைய பாணியிலே பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளது. அந் நூலை ஒருமுறை படித்தவர்களும் அதன் கருத்தையும், கற்பனை வளத்தையும், நடையையும் கண்டு வியப்பர். அதனை ஒரு சிறுவரின் பாடலாக எவரும் கருதார்; முதுபெரும்புலவர் ஒருவர் இயற்றியதாகவே மதிப்பர்.

---

[1] தேவி என்பது தேசிகவிநாயகன் என்ற பெயரின் சுருக்கம்; பாட்டா முதலிய பெயர்களோடு இப்பெயராலும் கவிமணி அழைக்கப்படுவதுண்டு.

உத்தியோகமும் இலக்கியப் பயிற்சியும்

கவிமணி பேருழைப் புடையவர்; அல்லும் பகலும் அயராது முயல்பவர். இறைவனருளால் தமது முயற்சியில் மகத்தான வெற்றியும் பெற்றுள்ளார். கவிமணியின் கலாசாலைக் கல்வி குடும்பச் சிக்கல்களால் நிறைவுறாது போயினும், அவரது கல்விப் பயிற்சி தொடர்ந்து நிகழ்ந்துகொண்டு வந்தது. அவர் முதலில் ஓர் ஆரம்பப் பாடசாலை ஆசிரியராக உத்தியோகத்தில் புகுந்தார். எனினும் தமது அறிவாலும் உழைப்பாலும் படிப்படியாக உயர்ந்து திருவனந்தபுரம் மகாராஜா மாதர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அப்பொழுது பல நூல்களையும் கற்பதற்குரிய வாய்ப்பு அவருக்கு அதிகமாக அமைந்தது. தமிழிலக்கிய இலக்கணங்கள் அனைத்தையும் கற்றதோடமையாமல், ஆங்கில மொழியிலுள்ள சிறந்த கவிதைகள், உரைநடை நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், விமர்சன இலக்கியங்கள், முதலியவற்றையும் இன்னும் பாரசீகம், அரபி, பிரஞ்சு முதலிய மொழிகளிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதை நூல்களையும் அவர் கற்றார். இவற்றால் தேவியின் புலமையும் கவித்துவ சக்தியும் சுடர் விட்டு விளங்கின.

கவிமணி காலத்திற்கேற்ற கவிஞர்

கவிமணி காலத்திற்கேற்ற கவிஞர். தாம் வாழ்ந்த காலத்தின் இயல்பைத் தமது கவிதைகளில் பிரதிபலிக்கச் செய்ததோடு தமது சொந்த முத்திரையையும் காலச்சக்கரத்தில் பதியச் செய்தவர். தமிழிலக்கியத்திலே பல நூற்றாண்டுகளாக ஒரு பெரிய குறை இருந்து வந்தது. தமிழ்மொழி உலகிலுள்ள பழமையான மொழிகளில் ஒன்று என்பதை யாவரும் அறிவர். அதன் ஆதி இலக்கியங்கள் மூவாயிரம், நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றியன என்பர். இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த இலக்கியங்கள் இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அதற்குப் பின்னரும் தமிழ் இலக்கிய உலகிலே கவிஞர்களின் பரம்பரை இடையறாது வாழ்ந்து வந்துள்ளது. அக்கவிஞர்களும் புதியபுதிய இலக்கியங்களை இயற்றித் தந்துள்ளார்கள். ஆயினும் இவ் இருபதாம் நூற்றாண்டு வரையிலும் அக்குறை இருந்தே வந்துள்ளது. அது யாதென நோக்குவோம்.

தமிழில் குழந்தைப்பாடல்கள் இல்லாத குறை

சங்கப்புலவர்களான கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் சொற்சுவை பொருட்சுவை கனிய இயற்றிய இலக்கியங்கள் பெரும் புலவர்களுக்கு மட்டுமே கற்று அனுபவிக்கக்கூடியனவாய் இருக்கின்றன. சாதாரணமக்களுக்கு அவை பயன்படுவதில்லை. சங்ககாலத்திற்குப் பின் அடியார்கள் ஆழ்வார்கள் காலத்திலும் சேக்கிழார் கம்பர் முதலியோர் காலத்திலும், அதற்கு இப்பாலும் தமிழ்மொழி படிப்படியாக நெகிழ்ச்சியையும் எளிமையையும் அடைந்து வந்துள்ளது. ஆயினும் மேற்கூறிய ஞானிகளும் மேதைகளும் இயற்றிய இலக்கியங்கள் பாமர மக்கள் அனைவராலும் அனுபவிக்கக் கூடியனவாயில்லை. பிற்காலத்தில் தோன்றிய சில பிரபந்தங்களும், தனிப்பாடல்களும், விடுகவிகளும், நாட்டுப்பாடல்களும் சிறிது எளிமையுடையனவே. ஆயினும் அவை சமூகத்தின் ஒரு முக்கிய அம்சமான சிறுவர் சிறுமியர்கள் கற்று அனுபவிப்பதற் குரியவையல்ல. கவிஞர்கள் எவருமே சிறு குழந்தைகளைக் கருத்திற்கொண்டு அவர்கள் பொருட்டுக் கவிதைகள் எழுத முற்படவில்லை. இளைஞர்களின் உள்ளத்தில் ஒழுக்கத்தை வற்புறுத்துவதற்காகச் சில புலவர்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நீதிநெறிவிளக்கம் முதலிய நூல்களை எழுதினர். அந் நீதிச் செய்யுட்கள் பொருளாலும் அமைப்பாலும், ஆசிரியர் போதனு முறையாலும் மாணவர் உள்ளத்தைக் கவர்வனவாய் இல்லை. இனிய, எளிய கவிதைகளைக்கற்று மகிழும் வாய்ப்புக் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதில்லை. இளமையிலே கவிதை அனுபவத்தில் பயிற்சி பெறுததால் அக்குழந்தைகள் பின்னர் இலக்கியத்தைக் கற்கும் ஆற்றலை இழந்து விடுகின்றனர். இந்த விதிக்கு விலக்கான ஒரு சிலரே கவிதைகளிலும், இலக்கியங்களிலும் ஈடுபடுகின்றனர். இக் காரணத்தால் பாமரர் என்றும் பண்டிதர் என்றும் இரண்டு இனங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றிச் சமூகத்தில் தோன்றி நிலைத்து வருகின்றன.

அக் குறை கவிமணியால் அகலுதல்

பழமையும் செழுமையும் வாய்ந்த தமிழ்மொழியில் நெடுங்காலமாக இருந்துவரும் இக்குறை கவிமணியின் மூலமாக அகற்றப்பட வேண்டும் என்பது தமிழ்த்தெய்வத்தின் திருவுள்ளம் போலும்! ஆங்கிலமொழியிலுள்ள கவிதைகளைத் தேவி கற்றபோது அம்மொழியில்

சின்னஞ்சிறிய குழந்தைகளும் பாடி மகிழ்வதற்குரிய கவிதைகள் மிகுதியாக இருப்பதைக் கண்டார். தமிழிலும் அத்தகைய கவிதைகள் தோன்றவேண்டும் என எண்ணி அம் முயற்சியில் தலைப்பட்டார். அப் புதிய துறையை வளம்படுத்தி மகத்தான வெற்றி பெறுவதற்கான தகுதிகளும் கவிமணியிடம் நிரம்பியிருந்தன. அவர் இயல்பாகவே ஆடம்பரத்தை வெறுப்பவர்; எளிமையை விரும்புபவர். அவரது உள்ளம் குழந்தைகளின் உள்ளம் போன்று மாசு மறுவற்றது. எந்தப் பொருளைக் குறித்துச் சிந்தித்தாலும் அதன் நல்ல அம்சங்களைக்கண்டு பாராட்டும் பண்புடையவர். அவரது உள்ளம் முற்றி முதிர்ந்து கனிவு பெற்றுள்ளது. அதிலிருந்து தோன்றும் கருத்துக்களும் அக்கனிவில் தோய்ந்து பக்குவமாக வெளிவரும். கவிமணி தேனிலே ஊறிய செஞ் சொற்களை யாதொரு முயற்சியுமின்றி இயல்பாகவே ஆளும் நாவன்மை படைத்தவர். அவர் கவிதைப் பணியில் ஈடுபடும்போது இனிய எளிய அற்புதக் கவிதைகள் அவரது திருவாய் மலர்ந்து வெளிவரும்.

பாரதியார் பாடல் எளியனவே, ஆயினும் உணர்ச்சி மிக்கவை

கவிமணிக்குப் பலஆண்டுகளுக்கு முன்பு விளங்கிய பாரதியாரும் ஒரு சிறந்த கவிஞரே என்பதைத் தமிழுலகம் நன்கறியும். அவர் கவிதைத்துறையில் பழமையை அகற்றி, கருத்திலும், கற்பனையிலும், சந்தத்திலும் புதுமையைத் தோற்றுவித்தவர்; பழங்காலக் கவிஞர்களைப் போலப் புலவர்களுக்காக மட்டுமன்றிப் பாமர மக்களுக்கும் பயன் படும் வகையில் கவிதை இயற்றியவர். பாரதியார் உணர்ச்சிப் பெருக்குடையவர். உணர்ச்சிப் பெருக்கில் அவர் தம்மை மறந்து ஆவேசம் கொள்வார். அப்போது கவிதைப் பெருக்குத் தட்டுத் தடையின்றிக் கங்கை காவிரிப் பிரவாகம் போன்று வெளிவரும். மேலும் அவர் ஒரு சிறந்த தேசபக்தர். நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டு அத்துறையில் தமது கவிதை வெள்ளத்தைப் பாய்ச்சினர். ஆதலால் அவர் தேசியக் கவி என்று புகழ்பெற்றூர். ஊக்கங் குன்றி மெட்டுறக்கம் கொண்டிருந்த இந்தியர் உள்ளத்தில் உணர்ச்சிக் கனலை மூட்டுவதே அவரது தலை சிறந்த நோக்கமாக அமைந்தது. பாரதியார் 'கண்ணன் பாட்டு', குயில் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' முதலிய வேறு பாடல்களையும், பாடியிருக்கிறூர். அவையும் எளிமை யுடையனவே, ஆயினும் அவ

ருக்கு இயல்பாக உள்ள உணர்ச்சியின் வேகத்தை அவரது பாடல்களிலும் காணலாம். அவரது கவிதை-வெறி மக்களுக்கு அந்நாளில் மிக அவசியமாக இருந்தது; சிறந்த பலனையும் தந்தது. ஆனால் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கும் இளைய பள்ளி மாணவர்களுக்கும், அக்கவிதைகளின் வேகத்தைத் தாங்கும் ஆற்றல் பெரும்பாலும் இல்லை. உதாரணமாகக் கீழ்வரும் பாடல்களைக் காணலாம்:

தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்

... ...

நச்சை வாயி லேகொ ணர்ந்து நண்ப ரூட்டு போதிலும்
பச்சை யூனி யைந்த வேற்ப டைகள் வந்த போதிலும்
உச்சி மீது வானி டிந்து வீழு கின்ற போதிலும்
அச்ச மில்லை அச்ச மில்லை அச்ச மென்ப தில்லையே.

... ...

பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

பாரதியார் முயன்றால் சிறுவர்களுக்குத் தகுதியான எளிய பாடல்களைப் பாடக் கூடியவரே. ஆனால் அவரது உள்ளம் அத்துறையில் ஈடுபடவில்லை. அவ்வரிய இலக்கியப்பணியை வெற்றிபெற ஆற்றும் பெருமை கவிமணிக்கே உரியதாயிருந்தது.

கவிமணியின் கவிதை யின்பம்

கவிமணியின் பாடல்கள் நறுமலர் ஓடையில் பாயும் தீஞ்சுவைத் தண்ணீரைப் பருகுவதைப் போன்ற இன்பத்தை அளிக்கும். மலர்கள் பூத்துச் செழித்த பொய்கைக் கரையிலிருந்து தென்றலை நுகர்வதை ஒத்திருக்கும். அளவாகப் பாயும் குற்றாலத் தருவியிலே ஆடிய சுகத்தை அவற்றில் காணலாம்; அலைகள் ஓய்ந்து காணப்படும் இராமேச்வரக் கடலில் ஆடிய இன்பத்தை அநுபவிக்கலாம். சுருங்கக் கூறின், சங்கப் புலவர்களும், வள்ளுவர் இளங்கோ கம்பர் இராமலிங்க சுவாமிகள் முதலிய

பெருங் கவிஞர்களும் இயற்றிய இலக்கியக் கடலில் மூழ்கித் திளைப்பதற்கு இன்றியமையாத படித்துறைகளாகக் கவிமணியின் பாடல்களைக் கூறலாம்.

கவிமணியின் கவிதைச் சிறப்பு

கவிமணி பாடிய 'முத்தந்தா', 'பசுவும் கன்றும்', 'வானங் கறுத்தால்', 'சைக்கிள் பாட்டு', 'நிலாப் பாட்டு', 'கோழிப் பாட்டு', 'கிளிப் பாட்டு', 'காலைப் பாட்டு', முதலிய பாடல்கள் மூன்றுவயதுக் குழந்தைகளும் சிலமுறை தம் தாயர் சொல்லக் கேட்பதன் மூலம் கற்று ஒப்பித்தற்குரியன. இத்தகைய கவிதைகளின் தொகுதியே "மலரும் மாலையும்" என்னும் இன்பக் களஞ்சியம். கவிமணியின் பாடல்கள் மிக்க எளிமையுடையவாயினும் அவற்றிற்குள் பேரிலக்கியங்களின் கருத்துக்களும் கற்பனைகளும் நயமாக அமைந்துள்ளமை காணலாம். 'எனது சுகதுக்கங்கள்' என்ற தலைப்பில் வரும் கவிதைகளில் ஒன்றை நோக்குவோம்.

தாமரைப் பொய்கையிலே—கதிரொளி
  தட்டுமெவ் வேளையிலே
பூமலர்ச் தோங்கிடவே—அரியென்ற
  போதம் நயப்பேனடி

தாமரைப் பொய்கையில் தண்ணீர் நீல நிறம் பெற்றுத் தோன்றுகின்றது. பசிய தாமரை இலைகள் தண்ணீரின் மீது படர்ந்து இருண்ட நிறத்தை அளிக்கின்றன. காலைப் பொழுதிலே கீழ்வானத்தில் சூரியன் உதிக்கிறான். அதன் ஒளிக் கதிர்கள் பட்டுத் தாமரையின் மொட்டுக்கள் மலர்கின்றன. பின்னணியிலுள்ள நீலம், பசுமை ஆகிய நிறங்களும் அவற்றின் மீது இடையிடையே விளங்கும் செவ்விய தாமரை மலர்களும் கவிஞரின் உள்ளத்தில் ஹரியின் (மகாவிஷ்ணு) உருவத்தை நினைவிற்குக் கொண்டுவருகின்றன. இக் கருத்து ஆழ்வார்களது அருளிச் செயல்களிலும், கம்பராமாயணத்திலும் வந்துள்ளமையை அறிஞர்கள் அறிவர்.

ஆன்றோர் கற்பனைகளையும் இவ்வாறே எளிமையும் இனிமையும் தோன்றக் கவிமணி தமது கவிதைகளில் அமைத்துள்ளார். புத்தர்

வரலாற்றைக் கூறும் 'ஆசிய ஜோதி' என்னும் நூலில் 'கருணைக் கடல்' என்ற தலைப்பில் வரும் கவிதைகளில் கீழ்வருவது ஒன்று.

கண்ணும் எழுதுமுன் ஓடிவந்தாள்;
கன்னி ஒருமகள் மையெழுதி—இரு
பின்னும் ஒருமகள் கூந்தலிலே—சூடும்
பிச்சி மலர் கையில் சுற்றிவந்தாள்.

மூவருலா, இராமாயணம் முதலிய நூல்களில் வரும் கருத்துக் களைப் பக்குவம் செய்து, இக்கற்பனையைக் கவிமணி அமைத்துள்ளார். இவற்றால் கவிமணியின் விரிந்த இலக்கியப் பயிற்சியையும், அவற்றில் வரும் கருத்துக்களைச் சுவைபடப்புதுக்கி, எளிமையாக்கி, இடமறிந்து ஆளும் வன்மையையும் நாம் உணரலாம்.

கவிமணி இயற்றிய கவிதைகளில் ஆங்கிலம் முதலிய பிறமொழிக் கவிதைகளைத் தமிழில் அமைத்துக் கொண்டவை முக்கியமாகும். 'ஆசிய ஜோதி', 'உமார்க்கய்யாம்' பாடல்கள் முதலியன இவ்வகையுள் அடங்கும். அவை வெறும் மொழிபெயர்ப்புக்களல்ல; மூலத்திற் கருக்கொண்ட பொருள்களை வாங்கி அவற்றிற்கு ஊனும், உயிரும், உணர்வும் அளித்துப் புதியவாகப் படைத்துக்கொண்டனவாகும்.

கல்வெட்டாராய்ச்சி

கவிமணி அவர்களின் தமிழ்த்தொண்டு கவிதை இயற்றுவதோடு அமைந்துவிடவில்லை. தென்னிந்தியச் சரித்திர ஆராய்ச்சியிலும் அவர் உள்ளம் ஈடுபட்டது. இதுகாறும் வெளியிடப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டுக்கள் அனைத்தையும் அவர் ஆராய்ந்துள்ளார்; தாமும் புதியவாகப் பல கல்வெட்டுக்களைக் கண்டு வெளியிட்டார். கல்வெட்டுக்களில் வருகிற மயக்கம்தரும் பல சொற்றொடர்களுக்கு உண்மையானபொருள் களை அறிந்து வெளிப்படுத்தினர். அவைகளைச் சிறந்த வரலாற்றாசிரிய ரான கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்களும் இலக்கியவல்லுநரான மு. இராகவையங்கார் அவர்களும் பாராட்டியுள்ளனர். காந்தளூர்ச் சாலையைக் குறித்து தேசிகர் வெளியிட்ட நூல் கல்வெட்டாராய்ச்சியில் அவருக்கிருந்த ஆழமான புலமையை வெளிப்படுத்துகிறது.

தமிழ்ப்பேரகராதி

இந் நூற்றாண்டின் முதற்பகுதியில் தமிழ் மொழியில் வெளி வந்துள்ள பெருநூல்களில் சென்னைச் சர்வகலாசாலையார் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) குறிப்பிடத் தக்கதாகும். சர்வகலாசாலையாரின் இம்முயற்சி வெற்றி பெறுவதற்குவெளியூர்களிலிருந்து உதவிபுரிந்த அறிஞர்களுள் கவிமணி முதன்மையாகக் கூறுதற்குரியார். கல்வெட்டில் வருவனவும், நாஞ்சில் நாட்டில் வழங்குவனவுமான எண்ணற்ற சொற்களைத் திரட்டி அவற்றின் பொருள்களோடு அவர் அறிவித்தார். அவரது உதவி அந்நூலின் முகவுரையில் வெகுவாகப் பாராட்டப்பட்டுள்ளது.

சமூகத்தொண்டு: மருமக்கள் வழியில் சீர்திருத்தம்

தேவி இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்ததுபோலவே, சமூகமுன்னேற்றத்துறையிலும் அரும்பணி புரிந்துள்ளார். கவிமணி நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழியைச் சார்ந்தவர். அந்த வழியில் குடும்பத்தலைவனின் சொத்துக்கள் அவனது மக்களுக்கு உரிமையாகாமல் சகோதரிவயிற்றுக் குழந்தைகளுக்கே உரிமையாகிவந்தன. இதனால் குடும்பத்தில் பல சீர்கேடுகள் தோன்றி, சண்டையும் வழக்கும் உண்டாயின. நீதிமன்றங்களில் இவரது வழக்குகள் பெருகின. இவ்வழக்குகளால் குடும்பச்சொத்துக்கள் ஒருவருக்கும்பயன்படாமல் நாசமடைந்தன. இந்நிலையை மாற்றிச் சொத்தின் உரிமை குடும்ப அங்கத்தினர்கள் அனைவருக்கும் சேரும்படியான ஒரு புது விதியை உண்டு பண்ணுவதற்காகக் கவிமணி முயன்றார். இப்புதிய சட்டத்தால் கவிமணிக்குக் கிடைப்பதற்குரிய குடும்பச் சொத்தில் நஷ்டம் ஏற்படுவதாக இருந்தது. சமூக நன்மைக்காகப் பாடுபடும் கவிமணி தமக்கு வரும் நஷ்டத்தைப் பொருட்படுத்துவாரா? சீர்திருத்தத்தில் ஆர்வமுடைய பல இளைஞர்கள் அவருக்குப் பின் துணை நல்கினர். தன்னலவாதிகள் சிலர் இம்முயற்சியைக் கடுமையாக எதிர்த்தனர். நாஞ்சில்நாடு முழுவதிலும் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது. கருத்துவேற்றுமைகளும், வாதப்பிரதிவாதங்களும் பூசல்களும் தலையெடுத்தன. கவிமணி சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்களை நகையாடி அறிவுறுத்துவதற்காக "மருமக்கள் வழி மான்மியம்" என்னும் நகைச்சுவை ததும்பிய நூலை இயற்றினர். அது தமிழிலக்கிய வகைகளிலே 'அங்கதம்' என்பதைச் சார்ந்ததாகும். அந்நூலைக் கையிலெடுத்துப் படிக்கத்தொடங்கியவர்கள்

அதை முற்றிலும் கற்றலன்றிக் கீழே வைக்கமாட்டார்கள். இவ் அனுபவ உண்மை ஒன்றே அதன் பெருமையை விளக்கப் போதிய சான்றாகும். தேவிகருதிய பயன் கைகூடுவதற்கு இந்நூல் பெரிதும் உதவியது. 1926-ல் சீர்திருத்த மசோதா சட்டசபையில் நிறைவேறியது.

தீண்டாமை ஒழிப்பு

சமூகத்திலே தீண்டாதார் என்னும் ஒரு வகுப்பினர் ஆலயப் பிரவேச உரிமை முதலியன மறுக்கப்பட்டுப் பல இன்னல்களுக்கு ஆளாகி வருந்துவது அறமல்ல என்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு அது தடையாயுள்ள தென்றும் எண்ணி அத்துறையில் சீர்திருத்தம் செய்வதற்காகக் கவிமணி முயன்றார். தமது கருத்துக்களை, 'தீண்டாமைப் பேய்' 'தீண்டாதார் விண்ணப்பம்' முதலிய கவிகளின் மூலம் வெளியிட்டார். நமது தேசத் தலைவர்கள் சட்டத்தின்மூலம் இச் சீர்கேடுகளை ஒழித்ததற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே தேவி அவற்றின் அவசியத்தை உணர்ந்து பாடியது அவரது முற்போக்குணர்ச்சியையும் எதிர்காலத் தேவைகளை முன்னரே கூர்ந்தறியும் ஆற்றலையும் புலப்படுத்துகிறது.

மாதர் முன்னேற்றம்

கவிமணி மாதர் முன்னேற்றங்கருதிப் பாடிய பாடல்கள் மிக முக்கிய மானதாகும். அவர் சீர்திருத்தத் தொண்டில் ஈடுபட்ட காலத்தில் பெண்கள் தம் உரிமைகளை அடையப்பெறாமல் அடிமைகள்போல் நடத்தப்பட்டு வந்தனர். குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், அவர்கள் ஆற்றிவரும் அரிய தொண்டின் சிறப்பை மக்கள் உணர்ந்துகொள்ளவில்லை. இதனால் பல துறைகளிலும் நாட்டு முன்னேற்றம் தடைப்பட்டிருந்தது. மாதர்களும் தமது பெண் பிறப்பை எண்ணி வருந்தித் தமது விதியை நொந்து கொண்டனர். இந் நிலைமை இப்பொழுதும் சீர் பெற்று விட்டது என்று கூறுவதற்கில்லை. இந்நிலை மாறிப் பெண்கள் தாம் புரிந்துவரும் இணையற்ற தொண்டின் சிறப்பை உணர்ந்து தமது தியாக வாழ்வில நம்பிக்கை கொள்ளவும், ஆடவர்களும் தமது தவற்றையும், கடமையையும் உணர்ந்து மாதர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கவும் வேண்டிக் கவிமணி

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா

என்று தொடங்கும் சிறந்ததோர்பாடலைப் பாடினர். அதனை இந்திய மாதர்களின் உரிமைச் சாசனம் என்று கூறுவது முற்றிலும் தகும். இதனைப் பாடிய கவிமணிக்கு மாதர் உலகம் என்றும் கடமைப் பட்டுள்ளது.

தேசீயத் தொண்டு

கவிமணி தமது கவிதைத்தொண்டைத் தேசியத் துறையிலும் புரிந் துள்ளார். 'தேசியக்கொடி', 'காங்கிரஸ் கப்பல்', 'வட்டமேசை மகா நாடு,' 'கதர் விற்பனை' 'வாழ்த்து' முதலிய, பாடல்கள் நாட்டுப்பற்றை வளர்க்கும் நோக்கோடு எழுதப்பட்டவை. கதர்விற்பனை என்ற பாடல் உருக்கமும், உணர்ச்சியும் வாய்ந்தது. அது மக்களிடையே பெரிய விழிப்பை உண்டுபண்ணி அவர்களைத் தேசத் தொண்டில் ஊக்கியது. ஆதலால், அக்காலத்திலிருந்த ஆங்கில அரசாங்கம் கவிமணியைக் கைது செய்யப் போவதாகக்கூட ஒரு செய்தி பரந்தது. ஆனால் கவி மணியோ ஒரு கர்மயோகியைப் போன்று கலங்காதிருந்தார்.

கவிதை இயற்றும் விந்தை

"உண்மைக் கவிஞன் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றுகிறுன்" என்னும் கருத்துடைய வாசகம் ஒன்று ஆங்கிலத் தில் உண்டு. கவிஞர்களின் உயர்வையும், அருமையையும் இவ் வாசகம் நன்கு விளக்குகிறது. அத்தகைய கவிஞர்களின்வரிசையில் வைத்துப் போற்றத் தகும் பெரும் புலவரே நமது கவிமணி. அவரது கவித்துவ சக்தி தொழிற்படும்போது அதனை உடனிருந்து பார்த்து இன்பமும், வியப்பும் அடையும் பேறு நெருங்கிய நண்பர்கள் சிலருக்கு வாய்த்த துண்டு. கவிமணி பார்வைக்கு மிகச் சாதாரணமான மனிதரே. ஆனல் கவிதைக்குரிய பொருள்களையும், அவற்றின் சுற்றுச் சார்புகளையும் கூர்ந்தறியும் நுழைபுலனும், பல உயர்ந்த கருத்துக்களையும் அனுபவங் களையும் அக் கவிதையோடு இணைக்கும் கற்பனை வளமும், அவை யனைத்தையும் அமுதத்தின் குழைத் தெடுத்த இன்சொல்லால் "பாவடியில் தேனெழுகப் பாடும்" கவித்துவ சக்தியும் அவரிடம் இருந்ததைப் போல் கோடிக்கொருவரிடமும் காணப்படுதல் அரிது. ஏதேனும் ஒரு பொருளை அவர் சிந்தனைக்கு விஷயமாக்கினல் அவர் உள்ளத்தின் ஒவ்வொரு பகுதியும் துரிதமாக இயங்கி அற்புதமான

கவிதையை அதிவிரைவில் படைத்து வெளி விடுகிறது. ஒரு கருத்துத் தானே வெவ்வேறு நயமுடைய பல கவிதைகளாக வடிவங்கொள்வதுமுண்டு. ஆலையில் ஒருபுறத்திற் செலுத்தப்படும் பஞ்சு எத்தனையோ மாறுதல்களைப் பெற்று மென்மையான ஆடையாக மற்றொரு புறத்திலிருந்து வெளிவருவதைப் போல, தெளிவின்றி பருப்பொருளாக இருக்கும் ஒரு கருத்து கவிஞர் உள்ளத்திற் புகுந்து நுண்பொருளும் தெளிவும் வாய்த்த கவிதையாக அவர் நாவிலிருந்து வெளிவருகிறது. கருத்து இங்ஙனம் கவிதையாக உருப் பெறுவதிலுள்ள மர்மங்களை விளக்குதல் எளிதன்று.

பச்சைப் புல்லைத் தின்று—வெள்ளைப்
 பால் தர நீயென்ன
பக்குவம் செய்வாய்—அதனைப்
 பகருவையோ? பசுவே!

என்று பசுவை நோக்கிக் கவிமணி வினவுவதைப் போலவே நாமும் அவரைப் பார்த்து "உருவற்ற கருத்துக்களை உருவும் உயிருமுடைய கவிதைகளாக எங்ஙனம் பாகஞ் செய்து தருகிறீர்?" என்று கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வெற்றி வாழ்க்கை

கவிமணியின் வாழ்க்கை பலவகையாலும் ஒரு வெற்றி வாழ்க்கையாகவே விளங்கியது. அவரது பேருழைப்பு சிறந்த பலனைத் தந்தது. அவரது புலமையைக் கல்வி இலாகாத் தலைவர்கள் உணர்ந்து அவருக்குத் தக்க உத்தியோக உயர்வளித்து ஊக்கி வந்தனர். கவிமணி பிதுரார்ஜிதமாகப் போதிய செல்வம் படைத்தவர். அவரது சொத்தின் வருமானமும், உத்தியோக சம்பளமும் அவரது எளிய வாழ்க்கையின் தேவைக்கு மிக அதிகமாகவே இருந்தன. சாதாரணமாகக் கவிஞர், புலவர்களைப் பற்றிக்கொண்டு நிழல்போல் நீங்காது தொடரும் வறுமை கவிமணியை ஒருபொழுதும் அணுகியதில்லை. கவிமணிக்குக் குழந்தை யில்லாக குறை யொன்றுண்டு. அக் குறையும் குடும்பப் பொறுப்புக்களிலிருந்து அவரை விலக்கித் தமிழ்த் தொண்டில் தீவிரமாக ஈடுபடுவதற்கே உதவியது. முதுமைக்காலத்தில் மக்கள் இருந்து ஆற்ற வேண்டும் தொண்டுகளுக்கு ஒரு சிறிதும் குறைவு நேராதபடி உத்தம மருகர் திரு. குமாரசுவாமிப் பிள்ளையும், அம்மருகரது மனைவியும் கவிமணிக்கு வாய்த்தனர். குழந்தைகளின்மையால் பந்த பாசம்

நீங்கி, விரிந்த மனப்பான்மையோடு எல்லாக் குழந்தைகளையும் தம் குழந்தைகளாகவே அவர் கருதி வந்தார். அக் குழைந்தைகளின் உள்ளம் மகிழ்ந்து, வாழ்க்கை மலர்வதற்காகத் தம்மையும், தமது கவிதைத் தொண்டையும் அர்ப்பணம் செய்தார். 'மலரும் மாலையும்' என்னும் கவிதை நூலைச் 'செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு'க் கவிமணி உரிமையாக்கினர்.

பேரும் புகழும்

தமது வாழ்நாளிலே எல்லோராலும் பாராட்டப்படும் பேறு கவிமணிக்குக் கிடைத்தது. செட்டிநாட்டு வள்ளல் ராஜா சர். அண்ணமலைச் செட்டியார் அவர்கள் கவிமணியைத் தமது நாட்டிற்கு வரவழைத்துப் பொன்னுடை போர்த்துச் சிறப்பித்தார்கள். அப்போது அவர்கள் அளித்த ஆயிரரூபாய்ப் பரிசை, 'நல்லாறெனினும் கொளல் தீது' என்னும் பொன்மொழிக் கிணங்கக் கவிமணி ஏற்கத் தயங்கிய போது அத் தொகைக்கு ஈடான வெள்ளிப்பாத்திரங்களை அவ்வள்ளல் கவிமணியின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தார்கள். பொருளாதாரத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி, இந்திய அரசாங்கத்தின் நிதி மந்திரியாகத் திகழ்ந்த டாக்டர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் முதுமையால் தளர்ச்சியுற்றிருந்த கவிமணியை அவரது ஊரிலே வந்து கண்டு, பொன்னுடை புனைந்து கௌரவித்தார்கள். கவிமணி நோய் முற்றிப் படுக்கையிற் கிடந்தபோது அப் படுக்கையில் அவரை அமரச் செய்து பொன்னுடை போர்த்திப் பெருமைப் படுத்தினுர் குன்றக்குடி அடிகளார். சக்கரவர்த்தி சி. இராஜகோபாலாச்சாரியார் கவிமணியை அவர்கள் இல்லத்திற் சென்று கண்டு அளவளாவினர். சென்னைத் தமிழ்ச் சங்கத்தார் தேவியின் கவிதைச் சிறப்பைப் பாராட்டிக் "கவிமணி" என்ற பட்டத்தைச் சூட்டினர். இந் நாட்டிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளனைத்தும் கவிமணியின் கவிதைகளை வேண்டிப் பெற்று ஆவலோடு வெளியிட்டு வந்தன. ஆனந்த விகடன், கலைமகள், கல்கி இவற்றின் ஆண்டு மலர்களைக் கவிமணியின் கவிதைகள் தவறாமல் அலங்கரித்து வந்தன. ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டுக் கவிதை புனைந்து அனுப்புமாறு கவிமணிக்கு நாள்தோறும் பல அன்பர்களிடமிருந்து கடிதம் வந்துகொண்டிருக்கும். அவற்றிற்கெல்லாம் கவிமணி தம்மால் இயன்றவரை கவிதைகள் புனைந்து அனுப்புவார். இங்ஙனம் கவிமணிபால் ஆசிபெற்றுள்ள அன்பர்கள்

பலர். கலாரசிகரான டி. கே, சி, "தற்காலத்தில் கவிமணி ஒருவரே கவிஞர், அவர் இயற்றுவது மட்டுமே கவிதை" என்ற உறுதியான கொள்கை யுடையவர். டி. கே. சி. கவிமணியின் கவிதை யின்பத்திலே பெரிதும் ஈடுபட்டு அவரது புகழைத் தமிழ்நாடெங்கும் பரப்பி வந்தார். வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார், பண்டித மணி கதிரேசச் செட்டியார் முதலியோர் கவிமணியின் கவிதைகளைப் பாடி அவற்றின் இன்பத்தில் திளைத்தனர். கவிமணி இயற்றிய கீர்த்தனைகள் இசையரங்குகளிலும் வானொலி நிலயத்திலும் சிறந்த இசைவாணர்களால் பாடப்பட்டுக் கேட்போருக்கு மகிழ்ச்சி விளைத்து வருகின்றன. இத்தனை சிறப்புக்களையும் கவிமணி, தம் வாழ்நாளிலேயே அடையப் பெற்றார். அவர் வாழ்க்கையை வெற்றி வாழ்க்கை என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ?

இறுதித் தொண்டு

கவிமணி எழுபத்தொன்பது ஆண்டுகளாக அல்லும் பகலும் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் தொண்டு புரிந்து வந்தார். ஆதலால் அவர் உடல் இளைத்தது. இழுப்பும், சொறிசிரங்கும் அவரை நெடுநாளாக வாட்டிவந்தன. சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவருக்குச் சிறுநீர்த்தடை ஏற்பட்டது. ஆதலால் ஆயுதச் சிகிச்சைக்கு ஆளானார். அது முதல் உடல்நலம் படிப்படியாகக் குன்றத் தொடங்கியது. காலும் கையும் தளர்ந்து நடக்கவும் இயலாதாயினர். அந்நிலையில் கவிமணி தமது தளர்வுறாத நாவால் மொழிக்கும் நாட்டிற்கும் தொண்டு செய்தார்; உள்ளத்தை உருக்கும் தெய்வ கீதங்கள் பல பாடினர்.

கவிமணி இறுதிக்காலத்தில் நோயோடு போராடி, கை கால்களின் சக்தி அடங்கிய நிலையிலும் தம் நாவால் புரிந்த தொண்டை எண்ணும் போது இராமகாதையில் கம்பர் சிருஷ்டித்த உத்தம பாத்திரங்களில் ஒன்றான கும்பகர்ணனின் நினைவு வருகிறது. அன்பு, தியாகம் என்னும் அருங்குணங்கள்வாய்ந்த அவ்வீரன் இராமனோடு போர் புரிந்து கையும் காலும் அறுப்புண்டு வீழ்ந்த பின்னும் தளராமல், வலியுடைய தன் நாவால் கற்களைப் பற்றி எடுத்துப் பகைவர் மீது வீசித் தன் கடமையை ஆற்றுகிறான். கவிமணி போன்ற

மேதைகள் காலும் கையும் ஓய்ந்து அடங்கிய தமது இறுதிக்காலத்திலும் காவல் புரியும் தொண்டினைக் கருத்திற்கொண்டே கும்பகர்ணனைக் கவிஞர் இவ்வாறு படைத்தார் போலும்!

நோயைத் தாங்குதல்

இத்தகைய தொண்டுகளில் ஈடுபடும்போதும் அன்பர்களோடு அளவளாவும் போதும் கவிமணி தம் நோயை மறந்திருப்பார். ஆனால் சில வேளைகளில் உடல் துன்பம் எல்லை மீறி வாட்டும்போது அவர் கருத்தழிந்து கலங்குவதுண்டு. அப்போது அவர் தளர்வுறும் தம் உள்ளத்தை நோக்கி,

மலையாதிரு மனமே
அலையாழி புரளாமல்
அண்டங்கள் சிதறாமல்
நிலையாய் நிறுத்தும் ஈசன்
நின்னைக்கை விடுவானோ
மலையாதிரு மனமே

என்று தாம் பாடிய கீர்த்தனத்தைப் பாடி ஆறுதல் பெறுவார். கம்பரின் புதல்வனான அம்பிகாபதி சோழனால் கொல்லப்பட்ட போது, கம்பர், அத் துன்பத்தை, இந்திரசித்து இறந்தவுடன் இராவணன் அழுது புலம்பியதாக இராமாயணத்தில் தான் பாடிய பாடல்களையே தன் நினைவிற் கொண்டுவந்து பாடி ஆற்றியதாக ஒரு வரலாறு கூறுவதுண்டு. கவிமணியின் செயலும் இதனை ஒத்திருந்தது.

கவிமணியின் உருவம்

கவிமணி தக்க உயரமும், உயரத்திற்கேற்ற பருமனும் உடையவர். உருண்டைமுகம், அகன்றநெற்றி, அந்நெற்றியில் விளங்கும் திருநீற்றுப்பூச்சு, காதில் இளமையிலேயே அணியப்பெற்றுள்ள கடுக்கன், தலையின் உச்சியில் சில ரோமங்கள், புலமையும் அமைதியும் பிரதிபலிக்கும் முகப்பொலிவு, வெள்ளையுடை, நிமிர்ந்தநடை, தெளிவும் உறுதியும் கலந்த பேச்சு—இவை கவிமணியின் இயல்புகள். சிரங்கு முதலிய நோய்களுக்கு ஆளாகி மெலிந்தபோது உடலின்நிறம் சற்று மங்கியது. பற்கள் இடையிடையே விழுந்துபோயிருந்தன. நாசித்துவாரங்கள் விரிவாகக்காணப்பட்டன.

அருங்குணங்கள்

கவிமணி அன்புமயமானவர். அவ் அன்பால் எல்லோரையும் தம்பால் அணைத்துக்கொள்வார். பிறர் துன்பப்படும்போது உள்ளம் உருகுவார்; அன்புரை வழங்கி அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார். இவ் அரிய பண்பே கருணைக்கடலான புத்தரின் வரலாற்றில் அவரை ஈடுபடுத்தி "ஆசியஜோதி"யைப் பாடச்செய்தது. இவ் அன்பு படிப் படியாக வளர்ந்து "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்னும் இலட்சியவடிவு கொண்டது. கவிமணி உள்ளத்தெளிவுடையவர். தமது நுண்ணிய நுழைபுலத்தால் பொருள்களின் சிக்கல்களை ஊடுருவி உண்மைகாணும் ஆற்றல் பெற்றிருந்தார். இலக்கணம் வரையறுப்பதற்கு அருமையான கவிதைக்கு

உள்ளத்துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத்தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை

என்று அவர் இலக்கணம் வகுத்தது இவ்வுள்ளத்தின் மாண்பினாலே யாம். கவிமணி ஒவ்வொரு பொருளையும் சுதந்திரமாகச் சிந்தித் துத் திட்டவட்டமான முடிவைக்கொண்டிருந்தார். உள்ளம் எப் பொழுதும் தெளிவாக இருப்பதால் வாக்கும் மயக்கத்திற்கிடமின்றி தெள்ளத்தெளிவாக இருக்கும். கவிமணி உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேச அறியாதவர். அவ்வாறு பேசுபவர்களை மனத் தால் வெறுப்பவர். எங்கேனும் அநீதி நிகழ்வதைக்கண்டால் உள் ளம் அழிவார். எவனும் தனது நியாயமான உரிமைகளைவிட்டுக் கொடுக்கச் சம்மதியார். கவிமணி புகழிலோ பொருளிலோ பற்றுக் கொள்ளாதவர். உலகம் இன்புற்றுத் தழைக்க வேண்டுமென்று அவர் அனவரதமும் இறைவனை வேண்டுவார். தன்னைக் காணவரும் அன்பர்களோடு கலை, கவிதை, இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம், அரசியல் முதலிய பொருள்களைக் குறித்துப் பேசுவார். தமது கருத்துக்களைக் கூறி அவர்களை மகிழ்விப்பார். விவாத விஷயங்கள் வரும்போது கவிமணி தம்மை மறந்து உணர்ச்சியோடு பேசுவார். அவரது உரையாடல் மிக்க கவர்ச்சியாக இருக்கும். வந்த அன்பர் களும் பொழுது போவதே தெரியாமல் அவரோடு அளவளாவுவர்.

கவிமணி, அவர்களுக்கு விருந்தளித்து அனுப்புவதையும் நியதியாகக் கொண்டிருந்தார்.

நண்பர்கள்

தமிழ் நாடு முழுவதிலும் கவிமணிக்கு நூற்றுக்கணக்கான நண்பர்கள் உண்டு. அவர்களில் பேராசிரியர்களான திரு. வையாபுரிப் பிள்ளை, திரு. சுவாமிநாதன், திரு. நீலகண்ட சாஸ்திரியார், ராவ்ஸாகிப் திரு. மு. இராகவையங்கார் என்போரும், திரு. பி. ஸ்ரீ கல்கி, திரு. பாஸ்கரத்தொண்டமான், திரு. சொ. முருகப்பா, திரு. சோம. லட்சுமணன் செட்டியார், திரு. ஏ. நாயனர் என்போரும் காலஞ்சென்ற டாக்டர். ஆர். கே. ஷண்முகம்செட்டியார், ரசிகமணி டி. கே. சி, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ஜட்ஜ் சத்தியநேசன் என்போரும் குறிப்பிடத் தக்கவர்கள். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்களின் புலமையிலும், ஆராய்ச்சியிலும் கவிமணி நம்பிக்கையுடையவர். தமது நூல்களுக்கு அவர்களே முகவுரை எழுதவேண்டு மென்று விரும்பினர். அவ்வாறே கவிமணியின் நூல்களனைத்தும் திரு. வையாபுரிப்பிள்ளை அவர்களின் முன்னுரை யோடு அவர்கள் பார்வையிலேயே வெளியிடப்பட்டுள்ளன.

கவிமணி 1876-ம் வருடம் ஜூலை மாதம் பிறந்தார்; 1954 ஸெப்டம்பர் மாதம் 26-ம் தேதி காலமானர்.

கவிமணியின் வாழ்க்கை முடிவுற்றது அல்லது கூம்பியது என்று கூறுவது சாலாது. அது இப்பொழுது பூரண மலர்ச்சியை அடைந்தது என்று கூறுவதே தக்கதாகும். பூவில் பூரண மலர்ச்சி தோன்றுவதும் அதன் வாழ்வின் இறுதி நிலையில் தானே! அத்தகைய தம் வாழ்வின் மலர்ச்சியையே கவிமணி தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளில் சூட்டி அஞ்சலி செய்வதற்காக நம்மை விட்டுப் பிரிந்து சென்றிருக்கிறர்.

கவிமணியின் புகழ் வாழ்க! கவிதைப்பணி வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க.

கவிமணி பிரிவுக்கு இரங்கற்பாக்கள்

திரு. ஆர். வீரபத்திரன் அவர்கள் M. A., தமிழ் விரிவுரையாளர்,
திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகக்கல்லூரி, திருவநந்தபுரம்.

கண்டும் கனியும் ரசப்பேறப் பைந்தமிழிற்
பண்ணிறைந்த பாவியற்றும் பாவாணன்—கண்ணுள்
மணியனையான் ஈசன் மலரடியைப் பாடும்
பணிபூண்டான் முத்திப் பதத்து. (1)

உள்ளம் குழந்தை உருமெலிவு நோயுடலம்
தெள்ளும் அறிவோ திகழொளியாம்—விள்ளும்
உரையோ அமுதம் உவமையிலாத் தேவி
கரையிகந்த அன்போ கடல். (2)

அன்போ டழைத்தே அருகிருத்தி ஆசிகனிந்(து)
இன்சொல் விருந்தோ டினிதளித்து—நன்பொருளை
என்னுடனே தேரும் எழின்முகிலை யானினியிம்
மன்னுலகில் காண்பனோ மற்று. (3)

வேறு.

சின்னஞ் சிறிய குழந்தை யெலாம் சிரித்து மகிழக் கவிபாடிப்
பன்னும் அரிய பொருளனைத்தும் பாநாய்ச் சமைத்திங் கறிவூட்டும்
தென்னன் தமிழிற் கவிமணியாம் தேசிக விநாயக நற்குரிசில்
மன்னும் உலகை நீங்கி அரன் மலர்ச்சே வடிக்கா ளாயினனே. (4)

கவியைக் கலையைக் காவியத்தைக் கருதி வளர்க்கும் புலவர்களைப்
புவியில் பெரும் புகழு முறப் பொன்னின் ஆடை போர்த்தற்குச்
சிவிகை யூரும் பெருஞ் செல்வர் சிந்தை கொள்ளின் யார்க்கினிமேல்
கவிதை செய்வர் கவிமணி யோடு கவினை இழந்தது காசினியே. (5)

வேறு.

என்றினித் தேவி தன்னின் எழின்மிகு வதனம் காண்பேம்
இன்றமிழ்க் கவிதை கேட்டே இணையிலா உவகை கொள்வேம்
நன்றுள செயலை நோக்கி நனிசிறந் துய்வேம் அந்தோ!
பொன்றலில் புகழே நிற்கப் புவியினை நீத்தா னன்றே. (6)

திராவிடக்கவிமணி, திரு. வே. முத்துசாமி ஐயர் அவர்கள் M. A. L. T.
அரங்கநாதபுரம், திருக்காட்டுப்பள்ளி P. O.

நேரிசை வெண்பா

தேசு கவிக்கதிரால் செந்தமிழ்நா டெங்குமொளி
வீசு கவிமணியாம் சந்திரனே!—நேசமிகு
தேசிகவி நாயகப்பேர்ச் செம்மலே நின்பிரிவை
ஆசகியேம் ஆற்றல் அரிது. (1)

'பாட்டுக் கொருபுலவன் பாரதி'யைப் பேரன்பு
நாட்டும் சிதம்பர நாதரைமுன்—கூட்டி இடம்
கண்டுவைக்கச் சொன்ன கதிரேசரைவிண்ணில்
கண்டிருப்பை உள்ளங் களித்து. (2)

கருணைக்குப் புத்தகதை காதலுக்குப் 'பார்சி'
அருமை 'உமர்கையாம்' அன்றிப்—பெருமை 'மலர்
மாலை' முதல் நூல்கடமிழ் மங்கை மகிழுமண
மாலையென்போம் என்றும் மதித்து. (3)

அண்ணா மலையரசன் அந்நாள் முதன்முதலாப்
பொன்னாடை போர்த்துன்னைப் போற்றினான்—செந்நாக்
கவிமணியே! இன்பக் கவிமணியால் வையம்
நவமணியப் போர்த்தாய் நயந்து. (4)

சித்திரத்தும் புத்தகத்தும் சேர்வா னொலியகத்தும்
கைத்திறந்த சிற்பக் கலையினுளும்—வைத்துன்னை
வந்திப்போம் நாளும் வழிவழி வாழிநின்சீர்
சிந்திப்போம் இன்பமிகச் செய்து.

பாலகவி, திரு. முத்து. கோ. இராமன் அவர்கள் அரங்கநாதபுரம்,
திருக்காட்டுப்பள்ளி P. O.

பொன்னி கரையே புரண்டு வருவதுபோல்
கன்னித் தமிழில் கவிதைபுகல்—மன்னவனும்
எங்கள் கவிமணி எந்தவெழிற் றேவியை
எங்குநாம் காண்போம் இனி. (1)

வாடா மலர்மாலை வையத்தோர் சூடவெனத்
தேடாம லேயளித்த தேசிகனே—சேடாரும்
விண்ணாட்டு மாலை விரும்பியோ நீதேடி
மண்ணாட்டை விட்டகன்றாய் மன். (2)

செயபுரட் டாசிமதி சேர்அமா வாசை
நயமில்லா ஞாயிறு நாளில்—வியனுலகம்
போற்றுங் கவிமணி புக்கான் புகழ்மிகவே
கூற்றுதைத்தான் பாதம் குறித்து. (3)

மதிப்புரை.

1. திருவாசகம் - ஆராய்ச்சிப்பேருரை :— [உரையாசிரியர்: மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனூர் என்னும் பண்டிதமணி - திரு. க. சு. நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள். விலை ரூ. 15. விலாசம்: ஷை ஆசிரியர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை - இலங்கை. தென்னிந்தியாவில் கிடைக்குமிடம்: கபீர் அச்சகம், 193 ஹைரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.]

அருணோதயத்தின்பின் ஆதித்தவுதயம்போல, இவ்வாசிரியர் தந்த சிவபுராணவுரையின்பின் இத் திருவாசக ஆராய்ச்சிப் பேருரை மிகச் செவ்விதாக நிறைவெய்தியுளது. இத்துறையில் முன்னரே பலர் முயன்றனராயினும், நூல்முழுமைக்கும் நல்லுரைகண்டு முற்றுவிக்கும் பேறு, நம் பாரதியாரவர்களுக்கு வாய்த்தது.

மறைகளாலும் அறிதற்கரிய பரம்பொருள் மாயங்கள் விளைத்து வாதவூரடிகளை ஆட்கொள்ள, அப்பேரின்பவெள்ளம் பெருக்கெடுத்தொழுகி அருட்பாக்கள் உருக்கொளலாயின. இங்ஙனம் தோன்றிய திருவாசகத் தெய்வப்பாடல் தமிழ்நாடும் தமிழ்மொழியுந்தந்த தவப்பயனேயாகும். அப்பாக்களில் ஆழ்ந்த பொருள் நுகர்ச்சி எல்லார்க்கும் எளிதில் வாய்ப்பதின்று. அதனை இவ்வுரையாசிரியர் தாமும் துய்த்துப் பிறரையும் நன்கு துய்க்கச் செய்கின்றனர்.

இவ்வுரைப்பதிப்புப் பல சிறப்பியல்புடையது. நூலையும் உரையையும் பற்றி அறிதற்குரிய அரும்பொருளனைத்தும் உரையாசிரியர் முன்னுரையால் உணரக்கிடக்கின்றன. நூலில்வந்துள்ள உவமைகள் நுணுகி ஆராய்ந்து தொகுக்கப்பெற்றுள்ளன. பிறருரையில் பொருந்தாமைகளைப் பழிப்பில்லாமல் எடுத்துக்காட்டும் பண்புடைமை பாராட்டற்பாலது. பதிகத்தொடர்பும் பாட்டின் இயைபும் அடிகள் திருவுள்ளத்தை அடியொற்றி அமைவுடையவாக வரையப்பட்டுள. திருவெம்பாவை, திருக்கோத்தும்பி, திருப்பூவல்லி போன்றவற்றின் ஆராய்ச்சி முன்னுரைகள் அரிய நயமுடையன. பெரும்பான்மையும் பொருந்தாமையுள்ள புறச்சான்றுகளைவிடுத்து, இந்நூலின் அகச்சான்றுகொண்டே மணிவாசகப் பெருந்தகையின் வாழ்க்கை வரலாறு துணிவாக முடிக்கப்பெறுகின்றது. சுருக்கச்சொல்லின், வேறு எங்கும் விளங்குதல் அரிய சொல்முடிபு பொருள்முடிபுகள், சமயசாத்திரமுடிபு சரிதவரலாற்று முடிபுகள் எல்லாம் இவ்வுரையில் உள்ளங்கைக் கனிபோல் தெள்ளிதின் விளங்குமெனல் மிகையாகாது.

அழுத்தமான காகிதம், திருத்தமான அச்சு, உறுதியான கட்டடத்துடன் கூடிய இவ் அழகான புத்தகம் ஆயிரத்திருநூறு பக்கங்கள் அளவுள்ளது. இச் செயற்கருஞ் செயல் புரிந்த பாரதியாரவர்கள், இது போன்ற தெய்வத் தமிழ்ப்பணிகள் பல இயற்றி நிலவுலகில் நீடுவாழ இறைவன் அருள்பாலிக்கவேண்டும்.

2. ஸ்ரீராமன் கதையமுதம்:—[ஆசிரியர்: திரு. தி. சேஷாத்திரி அவர்கள் M. A. ஹிந்தி விரிவுரையாளர், மதுரைக் கல்லூரி. விலை: ரூ 1—8—0. விலாசம்: ஷை ஆசிரியர், 190, தெற்கு வெளி வீதி, மதுரை.]

ஆசிரியர் திரு. சேஷாத்திரியவர்களை நம் செந்தமிழ்நேயர்கள் அறியாதாரல்லர். 'கம்பரும் துளஸிதாஸரும்' என்ற கட்டுரையில், அவரது புகழ் பூத்துப் பொலிகின்றது. தேனும் பாலும் சேர்ந்து கலந்தால் அதன் இனிமை இன்னதென்று இயம்பலாகாதவாறு மிகுவதுபோல, இராமசரிதம் இரண்டையும் ஒன்றாக இணைக்கும் அடிப்படையில் அவர்கள் நிகழ்த்திவரும் சொற்பொழிவுகளின் சுருக்கமாக இவ் வருமையான புத்தகம் உருவெடுத்துள்ளது. பழையன என்று பலரும் பயிலாது கைவிடும் கருத்துக்கள் புதியன என்று போற்றிக் கைக்கொள்ளுமாறு இதில் ஒளிபெற்று இலங்குகின்றன. ஹிந்தி மாணவர்க்குத் தமிழிலும் தமிழ் மாணவர்க்கு ஹிந்தியிலும் அளவில்லாத ஆர்வம் விளைக்கவல்ல இது, பரீக்ஷைப் பாடமாக ஏற்றுக் கொள்ள மிகுதியும் தகுதி வாய்ந்ததென்பது சொல்லாமலே விளங்கும்.

---

3. ஜனநாயகம்: கலர்சார மாதச் சஞ்சிகை (மலர் 2 இதழ் 1):—[பத்திராசிரியர் திரு. V. G. சோமசுந்தரம் அவர்கள். ஆண்டுச் சந்தா ரூ 10. வெளிநாடுகளுக்கு ரூ 12—8—0. தனிப்பிரதி ரூ 1. விலாசம்: 'நிர்வாகி, ஜனநாயகம் காரியாலயம், கடலூர்'.]

அரசியல், விஞ்ஞானம், சரித்திரம், சமயம் முதலிய பலதிறப்பட்ட துறைகளில் புகழ்சான்ற பேரறிஞர்களால் எழுதப்பெற்ற கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. மேற்றிசை நாட்டுப் புலவரும் பிறரும் வேற்று மொழியில் எழுதியவற்றையும், இது தக்கமுறையில் தமிழாக்கம் செய்து தருகின்றது. ஒவ்வொரு கட்டுரையும் தருக்க நெறியில் நுட்பமாக மெய்ப் பொருளை ஆராயும் தன்மை வாய்ந்திருத்தல் வியந்து போற்றற்குரியது. உலகியல் வாழ்வில் உண்மையறிவு வளரப் பல்வகையாலும் நல்வழி காட்டும் இது, இக்காலத் தமிழ்ப் பத்திரிகைகளில் தலைசிறந்த தென்னலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணுநூல் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மகீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச் சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணு 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 50 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒருரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணு வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.